# வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்படும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் மாவட்ட இணையம் தொடர்பான யாப்பும் நடை முறை விதியும்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் அமைப்பின் 13 ஆம் திருத்தத்தின் பிரகாரம் வடக்கு மாகாண சபைக்குள்ள அதிகாரத்திற்கமைய 06.04.2016ஆம் திகதி நடைபெற்ற வடக்கு மாகாண கௌரவ அமைச்சரவை வாரியத்தின் அங்கிகாரத்துடன் 02.05.2016ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கிராம அபிவிருத்தி பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன் ஆகிய நான் இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

**திகதி:- 02.05.2016**

பணிப்பாளர்,

கிராம அபிவிருத்தி திணைக்களம்

வடக்கு மாகாணம்

# மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் இணையம்
# .................................. மாவட்டம்

**பெயர் :-**

இந்நிறுவனத்தின் பெயர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ........................................................ மாவட்ட இணையம் ஆகும். தொடர்ந்து வரும் இடங்களில் இந்நிறுவனம் “இணையம்” எனக் குறிப்பிடப்படும்.

**முகவரி :-**

இணையத்தின் முகவரி பொதுச்சபையால் தீர்மானிக்கப்பட்ட இடமாகும். முகவரியில் மாற்றங்கள் ஏற்படின் அரசாங்க அதிபர், பணிப்பாளர் கிராம அபிவிருத்தி திணைக்களம், மாவட்ட அலுவலர் கிராம அபிவிருத்தி, வங்கி, உறுப்பினர்கள் ஆகியோருக்கு 07 நாட்களுக்குள் அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும்.

**நோக்கம் :-**

இணையத்தின் நோக்கங்கள் ஆவன :- உறுப்பினர்களின் நடவடிக்கைகளை இலகுவாக்குதலும் அவர்களின் ஒருமித்த கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுத்தலும், அவர்களது உற்பத்தி வியாபார ஏனைய வாழ்வாதார முயற்சித் திட்டங்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்குதலும் ஆகும்.

**அதிகாரங்கள் :-**

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கீழ் குறிப்பிடப்படும் கடமைகளை செய்வதற்கு இணையத்திற்கு அதிகாரம் உண்டு.

1) உறுப்புரிமைச் சங்கங்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
2) உறுப்புரிமைச் சங்கங்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்குதல்
3) உறுப்புரிமைச் சங்கங்களுக்கு உதவக்கூடிய நிதித் திட்டங்களை ஏற்படுத்துதல்
4) சேமிப்பு தொடர்பான வேலைத்திட்டங்களை உருவாக்குதல்
5) உறுப்புரிமைச் சங்கங்களின் செயல்பாட்டிற்கும், உறுப்புரிமைச் சங்க அங்கத்தவர்களுக்கு வேண்டிய பயிற்சித் திட்டங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்தல்
6) வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
7) காணி, கட்டிடம், இயந்திரம், உபகரணங்கள் ஆகியவற்றை நன்கொடையாக பெறல், அல்லது விலைக்கு வாங்குதல் அல்லது வேறு விதமாக கைக்கொள்ளுதலும், அவற்றை பராமரித்தலும், பாதுகாத்தலும்.
8) மாவட்டத்தில் உறுப்புரிமைச் சங்கங்களின் பிரதிநிதியாக செயல்படுதலும் உறுப்புரிமை சங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்தலும்.
9) உறுப்புரிமைச் சங்கங்களின் வாழ்வாதார சுழற்சி முறைக் கடன்திட்ட நடைமுறைகளை மேற்பார்வை செய்தலும் மதிப்பீடு செய்து அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும்.
10) மேலும் உறுப்புரிமைச் சங்கங்களுக்கு உதவக் கூடிய வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தலும் உறுப்புரிமை சங்கங்களினது உறுப்பினர்களின் வாழ்வாதார நடவடிக்கையினை அதிகரிப்பதற்கான தந்திரோபாய நடவடிக்கையினை திட்டமிடலும் மேற்கொள்ளலும்.

**தொழில் பரப்பு :-**
இவ் இணையத்தின் தொழில் பரப்பு எல்லை / அதிகார பரப்பு எல்லை .................................. அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர் நிருவாக மாவட்டமாகும்.

**உறுப்புரிமைத் தகமை :-**
தொழில் பரப்பு எல்லைக்குள் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் யாவும் உறுப்பினராக சேரும் தகைமை உடையனவாகும்.

**இனணய உருவாக்கம்:-**
இணைய உருவாக்கமானது குறித்த மாவட்டத்தின் அரசாங்க அதிபர் அல்லது அவர்சார்பில் பிரதிநிதி ஒருவர் கிராம அபிவிருத்தி திணைக்கள மாகாண பணிப்பாளர் அல்லது அவர் சார்பில் பிரதிநிதி ஒருவர் , கிராம அபிவிருத்தி திணைக்கள அமைச்சில் இருந்து பிரதிநிதி ஒருவர், மாவட்ட அலுவலர் கிராம அபிவிருத்தி ஆகியோர் முன்னிலையில் அவர்களின் பிரசன்னத்துடன் உருவாக்கப்படல் வேண்டும். உருவாக்கப்படும் இணையமானது உரிய ஆவணங்களுடன் கிராம அபிவிருத்தி திணைக்களத்திற்கு பதிவிற்காக அனுப்பப்படல் வேண்டும். கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் குறித்த இணையத்தினை ஏற்றுக்கொண்டதாக உத்தியோகபூர்வமாக பிரகடணப்படுத்தியதன் பின்னரே குறித்த இணையம் சட்டவலுப்பெறும்.

**உறுப்புரிமைக்கு இணைத்துக் கொள்ளுதல்:-**
உறுப்புரிமை பெறவிருக்கும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் செயலாளரால் ஒப்பமிடப்பட்டு, சங்க முத்திரை பொறிக்கப்பட்ட விண்ணப்பத்தை இணைய செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் விண்ணப்பப்படிவத்துடன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க பொதுச்சபையில் உறுப்புரிமை கோருவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியும் இணைக்கப்பட வேண்டும். கிடைக்கப்பெற்ற உறுப்புரிமை கோரும் சகல விண்ணப்பங்களையும் இணையத்தின் செயற் குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டிய பொறுப்பு இணையத்தின் செயலாளரைச் சார்ந்ததாகும்.

செயற்குழுவின் பரிசீலணையின் பின் ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் உறுப்புரிமைக்குரியனவாகும். உறுப்பினர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சகல சங்கங்களினதும் பெயர் விபரங்களை அடுத்துவரும் இணையத்தின் பொதுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியது இணைய செயலாளரின் கடமையாகும்.

இணையச் செயற்குழுவால் உறுப்புரிமை ஏற்றுக் கொள்ளப்படாத மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் பொதுச்சபைக்கு தமது விண்ணப்பத்தை இணைய செயலாளரூடாக சமர்ப்பிக்கலாம். பொதுச் சபையின் முடிவு இறுதியானதாக அமையும்.

ஒருவருடத்திற்கு மேலாக பொதுச்சபைக் கூட்டத்தைக் கூட்டாத அல்லது 03 மாதங்களுக்கு மேல் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தைக் கூட்டாத மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் செயல்படாத சங்கங்களாக கணிக்கப்படும்.

இவ்வாறான சங்கங்கள் தொடர்பாக பொதுச்சபையால் செயல்படாத சங்கங்கள் என தீர்மானம் மேற்கொள்ளப்படின் அத்தகைய சங்கங்கள் அடுத்துவரும் பொதுக் கூட்டத்திற்கு சமூகம் அளிக்கவோ அல்லது ஏதாவது தீர்மானத்திற்கு வாக்களிக்கவோ தகுதியற்றனவாகும். மேலும் தமது செயற்பாடு நிலமை தொடர்பாக பொதுச்சபையால் மேற்கொள்ளப்படவிருக்கும் தீர்மானத்தில் வாக்களிப்பதற்கு சம்பந்தப்பட்ட மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு அல்லது சங்கங்களுக்கு உரிமையிருக்கும்.

**உறுப்பினர் பதிவேடு :-**
உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளப்பட்ட சகல உறுப்புரிமைச் சங்கங்களினதும் கீழ் குறிப்பிடப்படும் விபரங்களை உள்ளடக்கிய உறுப்பினர் பதிவேடு இணைய செயலாளரால் பாதுகாத்து வைத்துப் வரப்படவேண்டும்.

1) உறுப்புரிமை பெற்ற சங்கத்தின் பெயர்
2) உறுப்புரிமை பெற்ற சங்கத்தின் பதிவு இலக்கமும் திகதியும்
3) உறுப்புரிமை பெற்ற சங்கத்தின் அங்கத்துவ இலக்கம்
4) உறுப்புரிமை பெற்ற திகதி
5) உறுப்புரிமையிலிருந்து விலக்கப்பட்ட அல்லது விலகிய திகதி

**உறுப்பினர் கடமைகளும் உரிமைகளும்**
உறுப்புரிமை ஏற்றுக்கொள்ளப்படாத எந்த சங்கத்திற்கும் உறுப்பினர் உரிமைகள், அதிகாரங்கள் எதற்கும் உரிமை இருக்காது. முழு உறுப்பாண்மைக் கட்டணத்தை செலுத்தாத சங்கங்களுக்கு பொதுக்கூட்டத்திற்கு சமூகம் அளிக்கும் உரிமையோ வாக்களிக்கும் உரிமையோ இருக்காது. மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தமது இணையத்திற்கான பிரதிநிதியை தமது நிறைவேற்றுக்குழுவில் இருந்தே தெரிவு செய்ய வேண்டும். தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி இணையத்தின் பொதுக்கூட்டத்தில் பங்கு பற்றுவதற்காக தலைவர், செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்ட அதிகாரக் கடிதத்தை வழங்க வேண்டிய பொறுப்பு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்ததாகும்.

இணைய பிரதிநிதியின் பிரதிநிதித்துவம் அவர் தமது சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் பதவியினை இழக்கும் கால் முடிவுறும். எனினும் அவர் இணையத்தின் செயற்குழு உறுப்பினராக கடமையாற்றிவரின் சம்பந்தப்பட்ட மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் விரும்பின் இணைய செயற்குழுவின் பதவிக்காலம் முடியும்வரை அவரை தமது பிரதிநிதியாக கடமையாற்ற அனுமதிக்கலாம்.

**பொறுப்பு :-**
இணையத்திற்கு ஏதும் நட்டம் ஏற்படின் அவை உறுப்பினர் சங்கத்தின் செயற்படு உறுப்பினர் தொகைக்கு ஏற்ப பொறுப்பு வரையறுக்கப்படும்.

**உறுப்புரிமை முடிவுறல்:-**
கீழ் குறிப்பிடப்படும் ஒரு காரணத்தினால் அல்லது பல காரணங்களால் உறுப்புரிமைச் சங்கத்தின் உறுப்புரிமை முடிவுறும்.

1) உறுப்புரிமைச் சங்கத்தின் செயல்படு நிலமை இல்லாதொழிதல்.
2) உறுப்புரிமைச் சங்கத்தின் இணைய உறுப்புரிமை நீக்கம் செய்யப்படல்.

உறுப்புரிமை நீக்கம் செய்தல்
இணையத்தின் செயற்பாட்டுக்கு இடையூறு ஏற்படுத்தும் உறுப்பினர் சங்கத்தை பொதுச்சபையின் அனுமதியுடன் உறுப்புரிமையில் இருந்து நீக்கம் செய்யலாம். எனினும் பின்வரும் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.
உறுப்புரிமையை நீக்கம் செய்ய உத்தேசித்திருக்கும் சங்கத்தினை ஏன் உறுப்புரிமையில் இருந்து நீக்கம் செய்யக்கூடாது என்பதற்கான காரணங்கள் ஏதும் இருப்பின் 14 நாட்களுக்குள் தெரிவிக்கும்படி இணைய செயற்குழு எழுத்து மூலம் கோர வேண்டும். தெரிவிக்கப்பட்ட காரணங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லாவிடின் செயற்குழுவால் இறுதி முடிவுக்காக இணைய பொதுச்சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இணையத்தின் வலுவுள்ள பொதுச் சபைக் கூட்டத்தில் சமூகம் அளித்திருக்கும் உறுப்பினர்களின் அரை (1/2) பங்கிற்கு மேற்பட்டோர் சாதகமாக வாக்களித்தால் மட்டுமே இத்தீர்மானம் செல்லுபடியாகும். உறுப்புரிமையை நீக்கம் செய்யும் விடயம் பொதுச்சபைக்கு சமர்ப்பிக்கப்படும் போது தனது பிரதிநிதி மூலக் கருத்து தெரிவிப்பதற்கும் வாக்களிப்பில் கலந்து கொள்வதற்கும் அச்சங்கத்திற்கு உரிமை உண்டு.

**மூலதனம்:-**

1) உறுப்பினர் சங்கத்தின் வைப்புக்கள்.

2) பிற உதவிகளும், நன்கொடைகளும்.

3) உழைத்துப் பெற்ற இலாபம்.

4) வேறு வகைகளால் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானங்களும் பணங்களும்

**வைப்புக்களுக்கான வட்டி :-**

உறுப்புரிமைச் சங்கங்களால் வைப்புச் செய்யப்படும் வைப்புக்களுக்கான வட்டி வீதம் இணைய பொதுச் சபையால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும்.

**பிற உதவிகளும் நன்கொடைகளும் :-**

பிற நிறுவனங்களிடமிருந்து அல்லது வேறு வழிகளில் பெற்றுக்கொள்ளப்படும் நிதிகளை வழங்கும் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பின் அவ் ஒப்பந்தத்திற்கமையவே அந்நிதிகளை பயன்படுத்த வேண்டும்.

**வெளிக்கடன் எல்லை**

இணைய பொதுச்சபையால் தீர்மானிக்கப்பட்ட விடயங்களுக்கும் தொகைக்கும் மேலாக எக்கடனையும் இணையம் பெற்றுக்கொள்ள அருகதையற்றதாகும்.

**நிதிகளைக் கையாளுதல்**

இணையத்தின் நோக்கங்களையும் அதிகாரங்களையம் உள்ளடக்கியதான விடயங்களுக்கே இணையத்தின் நிதி பயன்படுத்தப்பட வேண்டும். இணையத்தின் நிதிகள் கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் அவர்கள் அனுமதிக்கும் வங்கியிலேயே வைப்புச் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இணையம் உறுப்புரிமைச் சங்கம் தவிர்ந்த வேறு யாருக்கும் கடன் வழங்க முடியாது. இணையத்தால் பணியாளர்கள் நியமிக்கப்படின் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பிணை கிராம அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட வங்கியிலேயே வைப்புச்செய்யப்பட வேண்டும்.

வங்கி கணக்குகளில் நடைமுறைப்படுத்துவதற்கு தலைவர் அல்லது உப தலைவருடன் முகாமையாளர் அல்லது பொருளாளர் ஒப்பமிட அனுமதியுடையோர் ஆவர். இணையத்தின் நிதி வருடம் ........................................................................ திகதி தொடக்கம் ........................................................... திகதி வரையான காலத்தைக் கொண்டதாகும்.

**பொதுச்சபை:-**
இணையத்தின் செயற்பாடுகள் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் முழுமையான அதிகாரம் பொதுச்சபைக்கே உண்டு.

இணையத்தின் பொதுச்சபை உறுப்புரிமைச் சங்கங்களின் பிரதிநிதிகளையும், இணைய செயற்குழுவினரையும் கொண்டதாக இருக்கும். எனினும், சங்கப்பிரதிநிதிகள் அல்லாதோருக்கு வாக்குரிமை இருக்காது. ஏதேனும் விடயங்கள் வாக்கெடுப்பிற்கு விடப்படும் போது சமனான வாக்குகள் இருபக்கமும் கிடைக்கப்பெற்றால் மட்டும் தலைவராக கடமையாற்றுபவருக்கு அறுதியிடும் வாக்களிக்கும் உரிமை இருக்கும்.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை விசேட பொதுக்கூட்டங்கள் கூட்டப்படலாம். வருடாந்த பொதுக்கூட்டம், நடந்து முடிந்த வருடாந்த பொதுக்கூட்டத்திகதியில் இருந்து 15 மாத காலம் முடிவதற்கு முன் கூட்டப்பட வேண்டும்.

இணையத்தின் பொதுக்கூட்டம், கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரால் அல்லது தலைவரால் அல்லது செயற்குழுவின் தீர்மானத்துக்கமைய அல்லது பொதுச்சபைப் பிரதிநிதிகளில் 1/3 பங்கிற்கு குறையாதவர்களது வேண்டுகோளுக்கமைய கூட்டப்படலாம். இவ்வாறு உரிமையுள்ளோர் எழுத்து மூலம் கோருமிடத்து இணைய செயலாளர் பொதுக் கூட்டத்தை கூட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

வருடாந்த பொதுக் கூட்டத்தை கூட்டுவதற்கு சங்க பிரதிநிதிகளுக்கு 14 நாட்களுக்கு முன் அறிவித்தல் வழங்கப்பட வேண்டும்.

திகதி, நேரம், இடம் என்பன குறிப்பிடப்பட வேண்டும். பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் பொதுக்கூட்ட திகதிக்கு 10 நாட்களுக்கு முன் இணைய செயலாளருக்கு தமது பிரேரணையை எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

பொதுக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் குறைந்தது 07 நாட்களுக்கு முன் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். கிராம அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளரால் 03 நாட்கள் முன் அறிவித்தல் கொடுத்து பொதுக்கூட்டம் கூட்டப்படலாம்.

தலைவர் அவர் சமூகம் அளிக்காதவிடத்து உபதலைவர் இருவரும் சமூகம் அளிக்காவிடத்து பொது விருப்பத்தின் பேரில் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் பொதுக் கூட்டத்திற்கு தலைமை தாங்கலாம்.

கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரால் பொதுக்கூட்டத்திற்கான அழைப்பு அனுப்பப்பட்டால் அவர் விரும்பின் பொதுக்கூட்டத்திற்கு தலைமை தாங்கலாம்.

கிராம அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர், அவர்கள், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இணையத்திற்கு பொறுப்பான கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோருக்கு இணையத்தின் பொதுக்கூட்டத்தில் சமூகம் அளிப்பதற்கும் பேசுவதற்கும் உரிமை இருக்கும்.

இணையத்தில் செயற்குழுத் தெரிவு, பொது விருப்பத்தின்படி இரகசிய வாக்கெடுப்பு மூலமோ அல்லது வெளிப்படையான தெரிவு மூலமோ நடாத்தப்படலாம்.

பொதுக்கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் எந்தத் தீர்மானமும் பொதுக்கூட்டத்திற்கு சமூகம் அளித்திருக்கும் பிரதிநிதிகளில் வாக்களிக்க தகுதியுள்ளோரின் அரைவாசிக்கு (½) மேற்பட்டவர்களது சாதகமான வாக்குகளைப் பெற்றால் மட்டுமே நிறைவேறியதாக கருதப்படும்.

**நிறைவெண்:-**

பொதுக்கூட்டத்திற்கு வாக்களிக்கத் தகுதியுள்ள மொத்த உறுப்பினர்களில் $^{1}/_{3}$ பங்கினர் அல்லது 25 பேர் நிறைவெண்ணாக இருக்கும். எனினும் பணிப்பாளர் கிராம அபிவிருத்தி திணைக்களம் அவர்களால் மாவட்ட அடிப்படையில் மாற்றங்கள் செய்யப்படலாம்.

பொதுச்சபையின் அதிகாரங்களும் கடமைகளும்

- ✓ கணக்காய்வு அறிக்கையை ஆராய்தல்
- ✓ கடந்தகால செயற்குழு அறிக்கையை ஆராய்தல்
- ✓ செயற்குழுவுக்கு 15 பேருக்கு மேற்படாதோரை தெரிவு செய்தல்
- ✓ உறுப்புரிமைச் சங்கங்களின் கோரிக்கைகளை ஆராய்தல்
- ✓ உறுப்புரிமை மறுக்கப்பட்ட சங்கங்களின் விண்ணப்பத்தை பரிசீலித்து முடிவு செய்தல்
- ✓ உறுப்புரிமைச் சங்கத்தை உறுப்புரிமையிலிருந்து நீக்குதல்
- ✓ எதிர் வருட வேலைத்திட்டத்தையும் வரவு செலவுத் திட்டத்தையும் ஆராய்ந்து அங்கீகரித்தல்
- ✓ நடைமுறை விதிகளில் திருத்தங்களை மேற்கொள்ளுதல்
- ✓ தொடர்புடைய நிறுவனங்களது கடித விடயங்களை ஆராய்ந்து தீர்மானங்கள் எடுத்தல்
- ✓ கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளரதும் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரதும் இணையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரதும் குறிப்புக்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுத்தல்
- ✓ இணையத்திற்கான கணக்காய்வாளரை நியமனம் செய்தலும் அவர்களுக்கான கொடுப்பனவை தீர்மானித்தலும்.
- ✓ இணையத்தின் எந்தப் பொதுக்கூட்ட அறிக்கையையும் அடுத்துவரும் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்பட வேண்டும். நடைபெற்ற பொதுக்கூட்ட அறிக்கை அடுத்து நடைபெறும் செயற்குழுவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பொதுக்கூட்டத்தின் ஒவ்வொரு தீர்மானமும் அறிக்கைப் புத்தகத்தில் எழுதப்பட்டு இணைய தலைவராலும் செயலாளராலும் ஒப்பமிடப்பட வேண்டும்.

**செயற்குழு**

- ✓ இணையத்தின் உறுப்பினர் சங்கங்களின் மத்தியில் இருந்து பிரதேச செயலாளர் பிரிவிற்கு ஆகக்குறைந்தது ஒருவர் வீதம் தெரிவு செய்யப்பட்ட 15 பேரைக் கொண்டதாக செயற்குழு இருக்கும். செயற்குழு தெரிவு செய்யப்பட்டதும், தனது முதலாவது கூட்டத்தில் தலைவரையும், உபதலைவரையும், செயலாளரையும் தெரிவு செய்ய வேண்டும். செயற்குழுவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒருவர் பொருளாளராக அல்லது இணையத்தால் நியமனம் செய்யப்பட்ட பணியாளர் ஒருவர் முகாமையாளராக கடமையாற்றலாம்.
- ✓ தலைவர் அல்லது செயற்குழுவின் பெரும்பான்மையினர், பணிப்பாளர் கிராம அபிவிருத்தித் திணைக்களம் ஆகியோர் செயற்குழுக் கூட்டத்தைக் கூட்ட அதிகாரமுடையவர்கள் ஆவர். இவ்வகையினர் எழுத்து மூலம் கோருமிடத்தே செயலாளர் செயற்குழுக் கூட்டத்தைக் கூட்ட அறிவித்தல்களை அனுப்ப வேண்டும்.
- ✓ செயற்குழுவின் தீர்மானங்கள் எவையும் சமனான வாக்குகளை பெறுமிடத்து தலைவராக கடமையாற்றுபவருக்கு அறுதியிடும் வாக்குரிமையிருக்கும்.

- ✓ கிராம அபிவிருத்தித் திணைக்கள பணிப்பாளர் அவர்களால் செயற்குழுக் கூட்டம் அழைக்கப்படின் அவர் விரும்பின் தலைமை தாங்கலாம்.
- ✓ தெரிவு செய்யப்பட்ட செயற்குழுவின் பதவிக்காலம் ஒருவருடமாகும். ஒருவருடம் முடிந்ததும் புதிய செயற்குழுவை தெரிவு செய்வதற்கு செயற்குழு நடவடிக்கை எடுக்கவேண்டும். பதவிக்காலம் முடிவுறும் உறுப்பினர் மீண்டும் தெரிவு செய்யப்படலாம். எனினும் அவர் தொடர்ந்து 03 முறை மட்டுமே செயற்குழு உறுப்பினர்களாக கடமையாற்ற தெரிவு செய்யப்படலாம்.
- ✓ எவ்வாறாயினும் பதவியில் உள்ள செயற்குழு அடுத்த செயற்குழு தெரிவு செய்யப்படும் வரை கடமையாற்றலாம்.
- ✓ பொதுச்சபையில் விவாதிக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் தீர்மானத்திற்கமைய எந்தச் சந்தர்ப்பத்திலும் பொதுச் சபைக்கு பதவியில் இருக்கும் செயற்குழுவை நீக்கி புதிய செயற்குழுவை தெரிவு செய்ய அதிகாரம் உண்டு.
- ✓ செயற்குழுக் கூட்டங்கள் தலைவரால் அவரில்லாவிடில் உபதலைவரால், அவரும் இல்லாவிடில் பொது விருப்பத்தின்பேரில் தெரிவு செய்யப்பட்ட ஒருவரால் தலைமை தாங்கப்படலாம்.
- ✓ வெற்றிடம் ஒன்றிற்காக சேர்க்கப்பட்ட செயற்குழு உறுப்பினரின் பதவி செயற்குழுவின் காலம் முடிவடையும் போது முடிவுறும்.

  செயற்குழுவின் நிறைவெண் 09 ஆகும்.
- ✓ எவ்வாறாயினும் இணையம் அமைக்கப்பட்டதும் பொதுச் சபையை உருவாக்கி செயற்குழுவை தெரிவு செய்யும் வரை பணிப்பாளர் கிராம அபிவிருத்தித் திணைக்களம் அவர்கள் தலைவர் உட்பட மூவரைக் கொண்ட செயற்குழுவை நியமணம் செய்ய அதிகாரம் உடையவராவார்.

**செயற்குழு பதவியை இழத்தல்**

தெரிவு செய்யப்பட்ட செயற்குழு உறுப்பினர் பின்வரும் காரணங்கள் ஏதேனும் ஒன்றினால் தனது பதவியை இழப்பார்.

- ✓ தான் பிரதிநிதித்துவம் வகிக்கும் சங்கத்தின் உறுப்புரிமை இல்லாதொழிதல்.
- ✓ செயலாளருக்கு ஒருமாத முன்னறிவித்தல் கொடுத்து இராஜினாமா செய்தல்
- ✓ பொதுச்சபையில் நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்படல்
- ✓ ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் இன்றி தொடர்ந்து 03 செயற்குழுக் கூட்டங்களுக்கு சமூகம் அளிக்காது விடல்.

**செயற்குழுவின் கடமைகள்**

நிறைவெண் இல்லாத கூட்டத்தீர்மானங்கள் எவையும் செல்லுபடி அற்றனவாகும்.

தேவை ஏற்படும் வேளை அல்லது மாதம் ஒருமுறை செயற்குழுக் கூட்டம் கூட்டப்பட வேண்டும்.

1. உறுப்புரிமைச் சங்கங்களின் வாழ்வாதார சுழற்சி முறைக் கடன் திட்ட செயற்பாடு உட்பட சகல நடவடிக்கைகளையும் பரிசீலனை செய்தல்
2. உறுப்புரிமை பெறாத தகமையுடைய சங்கங்களை உறுப்பினராக சேர்க்க நடவடிக்கை எடுத்தல்
3. செயற்படாத உறுப்புரிமைச் சங்கங்களின் நிதிகளை மீளப்பெற்று தனியான வங்கி கணக்கில் பேணி வருதல்
4. மாதாந்தம் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் உறுப்பினர் சங்கங்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டு சங்கங்களின் வளர்ச்சிக்கு உதவுதல்
5. தேவைக்கேற்ப உறுப்பினர் சங்க உறுப்பினர்களுக்கு வாழ்வாதார தொழில் முயற்சி, தொழில்திறன் ஆகியவற்றுக்கான பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுத்தல்
6. இணையத்தின் சுமுகமான செயற்பாட்டுக்கு இடையூறு ஏற்படுத்தும் செயற்குழு உறுப்பினர் மீது விசாரணை மேற்கொண்டு தேவை ஏற்படின் பொதுச்சபைக்கு அறிக்கை செய்தல்.
7. வெற்றிடத்திற்கு பொருத்தமான ஒருவரை ஒத்து தேர்ந்து எடுத்தல்
8. சிறந்த மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தை ஆண்டுதோறும் தெரிவு செய்து பரிசில்களை வழங்குதல்
9. இணையத்தின் வருடாந்த, விசேட பொதுக்கூட்டங்களைக் கூட்ட நடவடிக்கை எடுத்தல்
10. உறுப்பினர் சங்கங்களின் தீர்மானங்கள், விதப்புரைகள் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுத்தல்
11. கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் அவர்களதும், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரது அறிக்கைகளையும் குறிப்புக்களையும் ஆராய்ந்து ஏற்ற நடவடிக்கை எடுத்தல்
12. பணியாளர் சேவை தேவைப்படின் நிதிவசதிக்கேற்ப முறைப்படியான நடைமுறைகளை மேற்கொண்டு பணியாளர்களை நியமணம் செய்தல்
13. இணையத்தின் கணக்குகளையும், புத்தகங்களையும் ஆய்வு செய்ய அதிகாரமுடையவர்களுக்கு அக்கடமையில் உதவுதல்
14. ஒப்பந்த வேலைகளை பொறுப்பேற்றுச் செய்தல்
15. உறுப்பினர் சங்க உற்பத்திகளைப் பெற்று தேவையானவர்களுக்கு வழங்குதல்
16. உபகுழுக்களை நியமித்தலும் அவர்களது சேவைகளைப்பெற்று தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும்
17. உறுப்பினர் சங்க வைப்புக்களை பெற்றுக்கொள்ளுதலும் மீளளித்தலும்
18. மேலும் உறுப்பினர் சங்கங்களுக்கு உதவக்கூடிய வேறு கருமங்களை செய்தல்

செயற்குழு தனது செய்கடமைகளை புத்திசாதுரியத்துடன் மேற்கொள்ள வேண்டும். போதிய புத்திசாதுரியம் காட்டாமையினால் இணையத்திற்கு ஏற்பட்ட நட்டத்திற்கு செயற்குழு உறுப்பினர் ஒவ்வொருவரும் தனித்தும் ஒருமித்தும் பொறுப்பாளிகள் ஆவார்.

**உபகுழுக்கள்**

இணைய செயற்குழு வெவ்வேறு செயற்பாடுகளுக்கான மூவரைக்கொண்ட உபகுழுக்களை நியமனம் செய்யலாம். அவர்களில் ஒருவராவது செயற்குழு உறுப்பினராக இருக்க வேண்டும். உபகுழுக்கள் தமக்குள் இருந்து தலைவரையும் செயலாளரையும் தெரிவு செய்ய வேண்டும். உபகுழுவினைக் கூட்டுவதற்கான நிறைவெண் 02 ஆகும்.

**தலைவரும் உபதலைவரும்**

செயற்குழு முறைப்படி பொதுச்சபையால் தெரிவு செய்யப்பட்டதும் செயற்குழுவினால் தலைவரும், உபதலைவரும் தெரிவு செய்யப்பட வேண்டும். இவர்கள் செயற்குழுவினதும், இணையத்தினதும் தலைவர், உபதலைவராக கடமையாற்றுவர்.

**செயலாளர்**

- ✓ செயற்குழுவினால் செயலாளர் ஒருவர் தெரிவு செய்யப்படவேண்டும். அவர் இணையத்தின் செயலாளராகவும் கடமையாற்றுவார்.
- ✓ இணையத்தின் ஆவணங்களில் தலைவருடன் ஒப்பமிட அதிகாரமுடையவராக இருப்பார்.
- ✓ பொதுக்கூட்டம், செயற்குழுக்கூட்டம் ஆகியவற்றுக்கான அறிவித்தல்களை அனுப்பும் கடமை இவருக்குரியதாகும்.
- ✓ கூட்ட அறிக்கைகளை எழுதுவதும் அவற்றின் மீது நடவடிக்கை எடுப்பதும் அறிக்கைப் புத்தகங்களைப் பேணி வருவதும் இவரது கடமையாகும். இணைய முத்திரையை பாதுகாப்பாக வைத்திருப்பதும் தேவையான ஆவணங்களில் அதனை பதித்தலும் நடந்து முடிந்த ஆண்டுக்கான அறிக்கையை தயாரித்து பொதுச்சபைக்கு சமர்ப்பிப்பதும் இவரது கடமையாகும்.

**முகாமையாளர் :-**

இணையத்தின் கருமங்களை முன்னெடுத்துச் செல்வதற்கும், கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்து கணக்குகளை பேணி வருவதற்கும், மேலும் பணியாளர்களது சேவை தேவைப்படின் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கும் முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்படலாம். இவருக்கான கொடுப்பனவுகள் பற்றி இணைய செயற்குழு தீர்மானிக்கும். எனினும் பணிப்பாளர் கிராம அபிவிருத்தித் திணைக்களம் அவர்களது அனுமதியைப் பெற்ற பின்பே இந்நடைமுறை செல்லுபடியானதாக அமையும்.

**- 11 -கடமைகள் :-**

- ✓ காலத்திற்குக் காலம் தேவைப்படும் புத்தகங்கள், பதிவேடுகள், கடிதங்களை வைத்து பேணி வருதல்
- ✓ பெறப்படும் சகல பணத்திற்கும் பற்றுச்சீட்டு வழங்குதல், ரூபா 5000/= க்கு உட்பட்ட சேமிப்புக்களையும் செயற்குழுவின் அங்கீகாரத்துடனும் 5000/= கொடுப்பனவுகளையும் வழங்கும் போது கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளரின் முன்அனுமதியுடனும் மேற்கொள்ளல் வேண்டும்.
- ✓ பெற்றுக்கொள்ளுதல்
- ✓ கையிருப்பில் 5000/= ஐ பேணி அவற்றுள் கொடுப்பனவு செய்ய வேண்டி இருப்பின் தலைவரது அனுமதியைப் பெற்று கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்
- ✓ ரூபா 5000/= மேற்பட்ட பணங்களை வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து பேணி வருதல்
- ✓ அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள் புத்தகங்களையும் கையிருப்பையும் பரிசீலனை செய்ய கோருமிடத்து அவற்றை சமர்ப்பித்தல்
- ✓ கடன் முறிகள், ஒப்பந்த ஆவணங்கள் ஆகியவற்றையும் தனது பொறுப்பில் பாதுகாப்பாக பேணி வருதல்
- ✓ மேலும் செயற்குழுவினால் பணிக்கப்படும் கடமைகளை ஆற்றி வருதல்

**பிணக்குகள்**

இவ் இணையத்தின் நடைமுறை தொடர்பாக ஏற்படும் ஏதும் விவாதங்கள் விளக்கங்களுக்கு பணிப்பாளர் கிராம அபிவிருத்தித் திணைக்களம் அவர்களது முடிவே இறுதியானதாக அமையும்.

**இணையத்தின் பதிவினை இரத்து செய்தலும் கலைத்தலும்**

- ✓ மேற்கூறப்பட நடைமுறைகளுக்கு கட்டுப்படாது இணையம் இயங்குவதாக பணிப்பாளர் கிராம அபிவிருத்தி திணைக்களம் கருதும் பட்சத்தில்
- ✓ அரசிற்கு எதிரானதாகவும் அரசிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது உறுதி செய்யப்பட்டால்

கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் உரிய ஆவணங்களுடன் அமைச்சின் செயலாளருக்கூடாக கௌரவ மாகாண அமைச்சரவை வாரியத்திற்கு பத்திரம் சமர்ப்பித்து அவர்களின் அங்கீகாரத்துடன் கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் குறித்த இணையத்தின் பதிவினை இரத்து செய்து இணையம் கலைக்கப்பட்ட பிரகடனத்தை வெளியிடுவார்.